# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாந் தவணைப்பரீட்சை - 2018

| தரம் -07 | தமிழ் மொழியும் இலக்கியமும் | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

❖ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) சூரியனைக் கண்டதும் தாமரை மலர்ந்தது. இங்கு தாமரை என்பதன் ஒத்த சொல்
   1 அல்லி 2. ஆம்பல் 3. கமலம் 4. முல்லை

2) தமிழர்களின் மிகப் புராதனமான நாடக வடிவம் கூத்தாகும். இங்கு புராதனம் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்
   1. நவீனம் 2. பழைமை 3. தொன்மை 4. ஆரம்பம்

3) மானிடராய் பிறந்ததோர் வாழ்வில் இலட்சியத்துடன் வாழ வேண்டும். இங்கு இலட்சியம் என்பதன் ஒத்தசொல்
   1. குறிப்பு 2. வேண்டுகோள் 3. புனிதம் 4. குறிக்கோள்

4) "ஆசை வெட்கமறியாது" என்பது முதுமொழி இங்கு ஆசை என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்
   1. பேராசை 2. நிராசை 3. அவா 4. ஆர்வம்

5) தமிழிலுள்ள உயிர் மெய் நெடில் எழுத்துக்கள் எத்தனை?
   1. 7 2. 126 3. 216 4. 90

6) பாட்டு, புலவன் ,குரங்கு என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
   1. மந்தி 2. செய்யுள் 3. கவி 4. கவிதை

7) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
   1. வெள்ளி விழா 2. பொன்விழா 3. அமுத விழா 4. மணிவிழா

8) வயலும வயல் சார்ந்த இடத்தையும் குறிப்பது
   1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல்

9) உறவு முறைக் கடிதத்தில் இடம்பெறாத உறுப்பு
   1. முகவரி 2. விளிப்பு 3. தலைப்பு 4. ஒப்பம்

10) இளங்கன்று பயமறியாது எனும் பழமொழி கூறும் கருத்து
   1. திருப்தியற்ற மனம் 2. வாலிபத்துணிவு
   3. கன்றுக்குட்டி பயப்படாது 4. ஆராய்ந்து செய்

11) அவன் தினந்தோறும் எழுந்ததும் கடவுளைத் தொழுவான் இதில் அவன் என்பது
   1. முன்னிலை ஒருமை 2. முன்னிலைப் படர்க்கை
   3. தன்மை ஒருமை 4. படர்க்கை ஒருமை



kalvi.lk

12) குரங்கு அலப்பும் என்பது போல தேவாங்கு
1. கத்தும் 2. அழும் 3. கீச்சிடும் 4. கதறும்

13) காற்று பலமாக வீசியதால் மரத்திலிருந்து காய்கள் ................................ எனத் கொட்டின.
1. மடமட 2. மளமள 3. பொலபொல 4. திடுதிடு

14) பனையிலிருந்து அருணன் ............................ பறித்து வந்தான்
1. நொங்கு 2. நுங்கு 3. நுன்கு 4. நொங்க்கு

15) பின்வருவனவற்றுள் வந்த அடுக்குத் தொடர்
1. கடகட 2. சந்து பொந்து
3. சிறிய சிறிய 4. சின்னஞ்சிறிய

16) பின்வருவனவற்றுள் தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமைந்த மெய்யெழுத்துத் தொகுதி
1. ம்,ச்,ந்,த் 2. த்,ந்,ப்,ம் 3. க்,ச்,ண்,ட் 4. வ்,ழ்,ப்,த்

17) புயல் + காற்று என்பதைச் சேர்த்து எழுதினால்
1. புயல்க்காற்று 2. புயல் காற்று
2. புயற்காற்று 4. புயற்க்காற்று

18) கல்லூரி நாட்களில் நான் எழுதிய நாட்குறிப்பை எடுத்துப் புரட்டினேன். இதில் வந்துள்ள செயற்படுபொருள்
1. நான் 2. கல்லூரி 3. நாட்குறிப்பு 4. எழுதிய

19) இளமையில் கற்கும் கல்வி ................................ நிலைத்துநிற்கும்.
1. நீர்மேல் எழுத்துப் போல் 2. காட்டில் எறித்த நிலவு போல
3. கடல் மடை திறந்தாற் போல 4. கல் மேல் எழுத்துப் போல

20) பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப் பெயராக வராதது
1. நீதிபதி 2. நோயாளி 3. மடந்தை 4. அகதி

(20x11/2 = 30 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களிற்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
    - i. சூழலை பாதுகாப்போம்
    - ii. நீர் விரும்பும் பெரியார்
    - iii. மனித வாழ்வில் விஞ்ஞானம்
    - iv. உடைந்த குடையின் சுயசரிதை

(18 புள்ளிகள்)

2. உமது பாடசாலையில் இடம் பெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி பற்றி வெளியூரில் இருக்கும் உமது நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக.

(12 புள்ளிகள்)

3. பின்வரும் வினாக்களுக்கு பாடநூலை ஆதாரமாகக் கொண்டு விடை தருக.
    - i. கவிமணி . தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய நூல்கள் மூன்று தருக?
    - ii. கடமை என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்? எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்து?
    - iii. 1) யாம் ஜவேம் என்ற பாடலில் கவிஞர் சிறுமியைஎந்த வீதியில் சந்தித்தார்?
      2) சிறுமியின் வயது எத்தனை?
    - iv. காந்தியடிகளால் எழுதப்பட்ட கடிதம் எங்கிருந்து, எப்போது, யாருக்கு எழுதப்பட்டது?
    - v. தமிழ்நாடு, ருஷிய நாடு ,இலங்கை ஆகிய நாடுகளிற்கு உவப்பான கதை கூறுபவர்களின் பெயர்களைத் தருக?
    - vi. காட்டு விலங்குகள் அழிவதற்கான காரணங்கள் எவை?

(6x3=18 புள்ளிகள்)

4. பின்வரும் சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.
    - i. தண்டனை
    - ii. அல்லும் பகலும்
    - iii. பொருளாதாரம்
    - iv. மரியாதை
    - v. நன்கொடை
    - vi. அனுகூலம்

(6x2=12 புள்ளிகள்)

5. பின்வரும் பந்தியிலுள்ள வழுக்களை நீக்கி பந்தியை எழுதுக.
    என்னைப் பொருத்தமட்டில் எனக்கு எவ்வித அச்சமுமிள்ளை
    ஆகையால் வெலியுளகத்திலே என்னை நடை
    பெருகிறது என்று தெரிந்து கொல்ல எனக்கு
    ஆவள் இல்லை.

(10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

# GRADE 6,7,8

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**TAMIL MEDIUM**
850/= Monthly

**ENGLISH MEDIUM**
1000/= Monthly

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page